*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.09*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# The Pioneer of Agricultural Education: John James De Valois

**P. Sangeetharaj*,**
Ph.D. Research Scholar, Department of Tamil, Madras Christian College, East Tambaram, Chennai – 600059.
*Correspondence: sangeethwincy@gmail.com,

**Article Info**
Received on 23-Mar-2026, Revised on 28-Mar-2026, Accepted on 29-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

This article explores the life and pioneering contributions of John James De Valois, a visionary "Agricultural Missionary" who dedicated 40 years of his life to India under the American Arcot Mission. Born in Iowa, USA, in 1892 to a family of farmers, De Valois combined his deep-rooted Christian faith with professional expertise in agriculture, earning a degree from Iowa State University. He famously described himself not just as a preacher, but as a "Doctor of Soil" and a "Preacher of Better Agriculture".

Upon arriving in India in 1920, De Valois faced significant challenges, including a loss of government matching grants and the need to adapt modern Western farming techniques to the local Indian landscape. Despite these hurdles, he established a massive 330-acre agricultural farm in Katpadi, Tamil Nadu. His work revolutionized rural development through the introduction of high-yield livestock (such as Rhode Island Red chickens), advanced irrigation, and the establishment of a "Summer School of Agriculture".

De Valois's educational philosophy integrated academic learning with practical field experience, transforming students into "child workers" rather than laborers, with the goal of creating future leaders for the community and church. His immense contributions to Indian agriculture and rural upliftment were recognized by the Indian government; he was awarded the "Grama Seva Shiromani" gold medal by Chief Minister K. Kamaraj and honored by Prime Minister Jawaharlal Nehru. His legacy continues through the institutions named after him and his wife, Henriette, in the Vellore Diocese.

***KEYWORDS:*** *John James De Valois, Agricultural Missionary, American Arcot Mission, Katpadi Agricultural Farm, Doctor of Soil, Preacher of Better Agriculture, Rural Development, Agricultural Education, Grama Seva Shiromani, Livestock Management.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.09*

# விவசாயக் கல்வியின் முன்னோடி: ஜான் ஜேம்ஸ் தெவலாய்ஸ்

[*] **பா. சங்கீதராஜ்,** முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, கிழக்குத் தாம்பரம், சென்னை – 600059.
Email: sangeethwincy@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

அமெரிக்க ஆற்காடு மிஷனின் (American Arcot Mission) கீழ் இந்தியாவில் 40 ஆண்டுகள் பணியாற்றிய தொலைநோக்கு பார்வை கொண்ட "விவசாய மறைப்பணியாளர்" (Agricultural Missionary) ஜான் ஜேம்ஸ் டி வாலோயிஸ் (John James De Valois) என்பவரின் வாழ்க்கை மற்றும் முன்னோடிப் பங்களிப்புகளை இந்தக் கட்டுரை ஆராய்கிறது. அமெரிக்காவின் அயோவா (Iowa) மாகாணத்தில் 1892-ம் ஆண்டு ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த டி வாலோயிஸ், தனது ஆழ்ந்த கிறிஸ்தவ நம்பிக்கையையும் விவசாயத்தில் இருந்த தொழில்முறை நிபுணத்துவத்தையும் ஒன்றிணைத்தார். அயோவா மாகாணப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர், தன்னை ஒரு போதகராக மட்டுமல்லாமல், "மண்ணின் மருத்துவர்" (Doctor of Soil) மற்றும் "சிறந்த விவசாயத்தின் போதகர்" (Preacher of Better Agriculture) என்றும் பெருமையுடன் அழைத்துக்கொண்டார்.

1920-ல் இந்தியா வந்தடைந்த டி வாலோயிஸ், அரசாங்க மானியக் குறைப்பு மற்றும் நவீன மேற்கத்திய விவசாய நுட்பங்களை இந்திய நிலப்பரப்பிற்கு ஏற்ப மாற்றியமைத்தல் போன்ற பல சவால்களை எதிர்கொண்டார். இந்தத் தடைகளையும் மீறி, தமிழ்நாட்டின் காட்பாடியில் 330 ஏக்கர் பரப்பளவில் ஒரு பிரம்மாண்டமான விவசாயப் பண்ணையை அவர் நிறுவினார். அதிக மகசூல் தரும் கால்நடைகளை (ரோட் ஐலண்ட் ரெட் கோழிகள் போன்றவை) அறிமுகப்படுத்தியது, மேம்பட்ட நீர்ப்பாசன முறைகள் மற்றும் "விவசாயக் கோடைகாலப் பள்ளி" (Summer School of Agriculture) ஆகியவற்றைத் தொடங்கியதன் மூலம் கிராமப்புற மேம்பாட்டில் அவர் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்.

டி வாலோயிஸின் கல்வித் தத்துவம், கல்வி அறிவை நடைமுறைப் புலம் சார்ந்த அனுபவத்துடன் ஒருங்கிணைத்தது. மாணவர்களை வெறும் தொழிலாளர்களாகப் பார்க்காமல் "குழந்தைப் பணியாளர்களாக" (child workers) உருமாற்றி, அவர்களைச் சமூகம் மற்றும் திருச்சபையின் எதிர்காலத் தலைவர்களாக உருவாக்குவதை அவர் இலக்காகக் கொண்டிருந்தார். இந்திய விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்காக அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளை அங்கீகரிக்கும் விதமாக, அன்றைய முதலமைச்சர் திரு. கி. காமராஜர் அவர்களால் "கிராம சேவா சிரோமணி" தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. மேலும், பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களாலும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.09*

அவர் கௌரவிக்கப்பட்டார். அவரது பெயரிலும், அவரது மனைவி ஹென்றிட் பெயரிலும் வேலூர் மறைமாவட்டத்தில் (Vellore Diocese) இயங்கும் நிறுவனங்கள் மூலம் அவரது மரபு இன்றும் தொடர்கிறது.

**முக்கியச் சொற்கள் (Keywords)**

ஜான் ஜேம்ஸ் டி வாலோயிஸ், விவசாய மறைப்பணியாளர், அமெரிக்க ஆற்காடு மிஷன், காட்பாடி விவசாயப் பண்ணை, மண்ணின் மருத்துவர், சிறந்த விவசாயத்தின் போதகர், கிராமப்புற மேம்பாடு, விவசாயக் கல்வி, கிராம சேவா சிரோமணி, கால்நடை மேலாண்மை, ரோட் ஐலண்ட் ரெட் (Rhode Island Red), பயிர் சாகுபடி, இந்திய-அமெரிக்க மிஷன், தொழிற்பயிற்சி, வேலூர் மறைமாவட்டம்..

---

**அறிமுகம்:**

சரித்திரம் என்பது கடந்தகால நினைவுகளின் அடுக்குகளில் சேமித்து ஆவணப்படுத்தப்பட்ட நினைவுகள், நிகழ்வுகள் மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றின் நேர்மையான பதிவுகளாக, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டிய பொக்கிஷங்கள் என்பதில் எவருக்கும் மாற்று கருத்து இருக்க முடியாது. அவ்வாறு, வரலாற்றின் ஆளுமைகளில் நமது தலை முறையினர் தவிர்க்காமல் படிக்க வேண்டிய முக்கிய ஆளுமைகளில் முதன்மையானவர் ஜான் ஜேம்ஸ் தெவலாய்ஸ் என்பதினை இங்கு அனைவரிடமும் கவனப்படுத்த விரும்புகின்றேன்.

குறிப்பாக, அருட்பணியாளர் ஜான் ஜேம்ஸ் தெவலாய்ஸ் அவர்களை மக் கள் தெவலாய்ஸ் துரை என்றே அழைப்பதில் ஆர்வங்காட்டினர். அருட்பணியாளர் ஜான் ஜேம்ஸ் தெவலாய்ஸ் அவர்கள், தனது மனைவி மற்றும் நான்கு குழந்தைகளுடனான, தனது மொத்த வாழ்நாளில் 40 ஆண்டுகளை இந்திய அருட்பணியில், குறிப்பாக அமெரிக்கன் – ஆற்காடு மிஷனின் விவ சாய அருட்பணியாளராக (AGRICULTURAL MISSIONARY) தனது வாழ்வை அர்ப்ப ணித்துள்ளார்[i].

**முதல் தகவல்**

திருமிகு. ஜான் ஜேம்ஸ் தெவலாய்ஸ் அவர்கள், நவம்பர்-3, 1892ல், அமெரி க்காவின் ஆரஞ்சு நகர் என்று அழைக்கப்படும் அயோவா நகரில், 240 ஏக்கர் பண்ணை நிலத்துக்கு சொந்தக்காரர்களான கொர்நெலியஸ் (Cornelius) மற்றும் ஜென்னி(எ) அட்ரியன்னா வான் விக் (Adrianna Van Wyk) என்பவர்களு க்கு மூத்த மகனாக பிறந்தவர்[ii]. இவருடன் ஐந்து சகோதரர்களும் மூன் று சகோதரிகளும் பிறந்தனர்.

திருமிகு. ஜான் ஜேம்ஸ் தெவலாய்ஸ் தந்தை திருமிகு கொர்நெலியஸ், போய்டன் சீர்திருத்த

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm07042026.09*

சபை யின் (BOUDEN REFORMED CHURCH) உறுப்பினராக 26 அண்டுகள் இருந்தவர். இதில் 23 ஆண்டுகள் வயது வந்தோர் வேதாகம பள்ளியின் (ADULT BIBLE SCHOOL) ஆசிரிராக பணியாற்றியதில் இருந்து[iii], தெவலய்ஸ் அவர்கள் கிறித்துவ பற்றுருதியில் வளர்வதற்கான காரணங் களை நம்மால் நிதானிக்க முடிகிறது. மேலும், அவர்களது பண்ணையில், 200 கால்நடைகள், 200 பன்றிகள், 20 குதிரைகள் இருந்தன என்பதும், அவர் களது, பண்ணையில் இருந்த குதிரைகளை இரண்டு, மூன்று, நான்கு, மற் றும் ஆறு குதிரைகள் என பிரித்து, நிலத்தை உழுதல், விதை நடுதல், பயி ரிடுதல், அறுவடை செய்தல், தானியங்களை தூற்றுதல் போன்ற செயல் பாடுகளை செய்வதில் மிகவும் பிரியமாக இருந்துள்ளார். ஒவ்வொரு நாளும் அவர்களது பண்ணை நிலத்தில் அனுபவித்து, வேலை செய்வதென்பது தெவலாய்ஸ் அவர்களுக்கு ஒரு கொண்டாட்டமாகவே இருந்துள்ளது என்பதை நம்மால் அரிய முடிகிறது[iv].

தெவலாய்சின் தந்தையார் கொர்நெலியஸ் அவர்கள் அதிக நேரம் திருச்சபையின் ஊழியப்பணிகளில் அதிகம் செலவிட்டதால், பண்ணை செயல்பாடுகளில் இயற்கையாகவே ஆர்வம் இருந்த தேவலாய்சுக்கு அவர்களது பண்ணையில் காலையும் மாலையும் அதிக நேரம் செலவிட வேண்டிய அவசியம் இருந்தது. குறிப்பாக அவர்களது குடும்பத்தில், ஒவ்வொரு நாளும் குடும்ப அழைப்பு 5.30 (Family Call -5.30am) என்பது நிர்ணயிக்கப்பட்டு, தெவலாய்சும் அவரது அடுத்த மூன்று சகோதர்களும், அதிகாலை எழுந்து அவர்களது பண்ணையில் இருந்த 20 கறவை மாடுகளில் இருந்து பால் கறப்பது அன்றாட நிகழ்வாக இருந்துள்ளது.

அதுமட்டுமின்றி, அயோவாவின் அனைத்து பகுதிகளிலும், விவாசய செயல்பாடுகளை ஊக்கு விக்கும் மாநில தொடர் நிகழ்வு திட்டமாக “பண்ணை செயல் விளக்க திட்டங்கள்”, அயோவா நகரின் வளர்ச்சி திட்டங்களில் முதன்மை திட்டமாக முன்னெடுக்கப்பட்ட காலமது. அந்த கால கட்டத்தில், ஆண்டுதோறும் **“பண்ணை செயல் விள க்க ரயில்கள் - Farm Demonstration Trains)”** அயோவா நகருக்கு வந்துசேரும். அந்த நாளை தெவலாய்ஸ் ஆர்வமுடன் எதிர்பார்த்து அந்த நிகழ்வில் பங்கேற்பது அவரது வழக்கமாக இருந்திருக்கிறது.

அந்தக் காலத்தில் பெற்றோர்கள் தங்களது முதல் குழந்தைகளை மருத்துவராகவோ அல்லது ஊழியப்பணிக்கோ செல்வதையே விரும்புவர். ஆனால் தேவலாய்ஸ் அவர்களின் விவசாய ஈடுபாட்டை கண்டு அவரை ஊக்குவித்தனர். இதன் விளைவாக அயோவா மாநில பல்கலை கழகத்தில் படிக்கும்பொழுதே, விவசாயத்தில் பகுதிநேர பட்டயக் கல்வியை முடித்தார்.

கால்நடை வளர்ப்பு, பண்ணை பயிர்கள்- விவசாய செயல்பாடுகள் மீது அவருக்கு இயல்பிலேயே, ஆர்வம் இருந்த காரணத்தால், கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற FRESHMAN

LIVE STOCK JUDGING CONTEST எனும் போட்டியில் பங்கேற்று முதல் பரிசை பெற்று அனைனவைரின் கவனத்தையும் பெற்றார். இதன்காரணமாககல்லூரி மாணவராக இருந்த போதிலும், அவரது கல்லூரியின் கால்நடை பிரிவின் அனைத்து பேராசிரியர்களுக்கும் அறிவிக்கப்படாத உதவியாளராக மாறிப்போனார்[v]. இங்கு குறிப்பிட்டு சொல்லவேண்டிய செய்தி என்னவெனில், அயோவா மாநில கல்லூரியின் கால்நடை பிரிவில் தெவாலாய்ஸ் தமது பெயரை பதுவு செய்தபொழுது, அவரது அண்டை வீட்டார் அவரைப்பார்த்து பசு காலல்லூரியில் படிக்கப்போகிறாயா என்று நையாண்டியாக கேட்டபொழுது, ஆம், நான் அங்கே செல்வது **மண்ணுக்கான மருத்துவர் (DOCTOR OF SOIL)** எனும் படிப்பை படித்து, **சிறந்த விவசாய போதகராக (PREACHER OF BETTER AGRICULTURE)** செயல்படப்போவதாக அவர் பதில் அளித்திருப்பது நம்மை சற்றே யோசிக்க வைக்கும்.

கல்லூரிக்கு வெளியே, சமுக செயல்பாட்டில் ஈடுபடுகின்ற மக்களுக்காக தொடங்கப்பட்டு, செயல்பட்டுவந்த UPSILON SIGMA ALPHA FRATERNITY என்கிற சமுக அமைப்பில், உறுப்பினராக இருந்துள்ளார். அதே நேரத்தில், கல்லூரியின் சார்பில் தொடங்கப்பட்ட மகிழ்ச்சி மன்றம் (GLEE CLUB), இலக்கிய சங்கம் (LITERARY SOCIETY) மற்றும் விவசாய மன்றம் (AGRICULTURAL CLUB) ஆகியவற்றில் தீவிர உறுப்பினராகவும் இருந்துள்ளார். இந்த காலகட்டத்தில்தான், அயோவா மாகாணத்தின், அமெஸ் (AMES) நகர பிரெஷ்பெத்தேரியன் திருச்சபை முன்னெடுத்த இளைஞர்களுக்கான செயல் திட்டமான கடல்கடந்து கிறித்துவ பணிக்கான தன்னார்வலர்கள் என்ற மாநாட்டில் பங்கேற்றார். இம்மாநாட்டில், இத்தலைமுறையில், கிறிஸ்துவுக்காக இவ்வுலகை வெல்லுவோம் - WINNING THE WORLD FOR CHRIST IN THIS GENERATION) எனும் அறைகூவல் குறித்து கேட்டு அது குறித்து சிந்திக்கலானார்.

**இந்தியாவுக்கான அழைப்பு**

அமெரிக்காவின் சீர்திருத்த சபையும் அயல் நாட்டுக்கான மிஷினரி வாரியமும் இணைந்து அயல்நாட்டிற்கு மிஷினரிகளை அனுப்பி வைக்கும் பணியை மேற்கொண்டது. அத்தகைய ஒரு சூழலில்தான், திருமிகு தெவலாய்ஸ் அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர்களான அருள்திரு.J.C. வான் விக் (J.C.VAN WYK) மற்றும் திருமிகு.H.M.வீன்ஷோடென் (H.M.VEENSCHOTEN) ஆகிய இருவரையும், இந்தியா மற்றும் சீனாவுக்கான மிஷினரிகளாக அனுப்பப்பட்டனர். இதனைக்கேல்விப்பட்ட தெவலாய்ஸ் அவர்கள் இத்தகையதொரு அறைகூவல் தனக்கு கிடைக்கும் பட்சத்தில் அதனை தவறவிட மட்டேன் என விளையாட்டாக கூறியிருந்தார். காலசுழற்சியின் ஒரு அமெரிக்காவின் சீர்திருத்த சபையானது, இந்தியாவில் விவசாய அருட்பணிக்கான தேவையை

உணர்ந்தது. குறிப்பாக முதல் உலகப்போரின் முடிவுக்கு பிறகு, விவசாயகல்வியில் பட்டமேற்படிப்பு முடித்தவர்களை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டிய அவசியத்தை அமெரிக்க சீர்திருத்த சபை உணர்ந்தது. இதன்விளைவாக, 1917-ல், அன்றைய சென்னை மாகான அரசாங்கத்திடம், அமெரிக்க சீர்திருத்த சபையானது ஒப்பந்தத்தை மேற்கொண்டது. அதன் அடிப்படையில், அமெரிக்க சீர்திருத்த சபையானது, 15,000 அமெரிக்க டாலர்களை சேமிக்க வேண்டும். அந்த தொகைக்கு இணையாக அதே அளவு தொகையான 15,000 அமெரிக்க டாலர்களைச் சென்னை மாகாண அரசு அளிக்கும். இந்த 30,000 அமெரிக்க டாலர்களைக்கொண்டு, மிஷன் பணியாக விவசாய பணி மேற்கொள்ளவேண்டும்[vi] என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில், விவசாய பணித்திட்டம் முன்வ்ரையறுக்கப்பட்டது.

இதனைக் கேள்வியுற்ற தெவலாய்சின் ஒன்றுவிட்ட சகோதரரான வான் விக் அமெரிக்கன் தெஆற்காடு மிஷனுக்கு தேவலாய்சின் பெயரை சாத்தியமான விண்ணப்பதாரர் (Possible Candidate) என பரிந்துரைத்தோடு, தெவலாய்ஸ்க்கும் இது குறித்து கடிதம் எழுதினார். தகுதிவாய்ந்த விவாயக்கல்வி படித்து முடித்த பட்டதாரிகளை தேடுகின்ற பணியை அன்றைய அமெரிக்கன் ஆற்காடு மிஷன் மேற்கொண்டது. அதன் அடிப்படையில், 1918ஆம் ஆண்டு, அருட்பணி.B.இராட்சேபர் (Revd.B.Rottschaefer) அவர்களும், திருமிகு. H.வான்ஷுய்ஸ் (H.Warnshuis) அவர்களும் தற்செயல்விடுப்பில் அமெரிக்க சென்று தெவலாய்ஸ் அவர்களை நேர்காணல் செய்து, அமெர்க்க ஆற்காடு மிஷனின் முதல் விவசாய மிஷினரியாக மட்டுமின்றி, கடல்கடந்து செல்லுகின்ற முதல் விவசாய மிஷினரியாக (First Overseas Agricultural Missionary) தெரிவுசெய்யப்பட்டார்[vii]. மேலும் அமெரிக்க சீர்திருத்த சபையின் மூலமாக செலுத்த வேண்டிய இணைத்தொகையான (Matching Grant) 15,000 டாலர்களை உருவாக்க அமெரிக்காவின் அயோவா மாகனத்தின் திருச்சபைகளுக்கு தெவலாய்சின் தந்தையான கொர்நெலியஸ் உதவியின் மூலமாக மேற்கொண்டார். அருட்பணி இராட்செபர் மேற்கொண்ட இந்தப் பணிக்காக தெவலாய்ஷ் அவர்களின் தந்தையான கொர்நெலியஷ் 500 அமெரிக்க டாலர்களை நன்கொடையாக அளித்திருக்கின்றார்[viii]. பணத்தையும் கொடுத்து, தனது மூத்தமகனை முதல் விவசாய மிஷினரியாக அனுப்பியதை நினைத்து பார்க்கும்பொழுது, லூக்கா 10:2 சொல்லப்பட்டுள்ள அறுவடை மிகுதி ஆட்களோ கொஞ்சம் என்பது நினைவில் வந்து போவதை தடுக்கமுடியவில்லை.

**அது ஒரு அருட்பணிக்காலம்**

தெவலாய்ஷஸ் அவர்கள், சூலை27, 1920 அன்று ஹென்றிட் ஹால்ப்லேன்ட், திருமணம் செய்தார். செப்டம்பர் 1, 1920 அயோவாவிலிருந்து இந்தியாவுக்கு கணவனும் மனைவியுமாக

CC BY

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
**www.tamilmanam.in**
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.09*

மிஷினரிகளாக புறப்பட்டனர். அதன் பிறகு சென்னையில் இருந்து காட்பாடிக்கு ரயில் மூலமாக வந்து சேர்ந்தனர். அதன்பிறகு விவசாய பணிக்கான தொடக்க விழா நடைபெறுமென தெவலாய்ஷ் எதிர்பார்த்தார். ஆனால், அவர் இந்தியா வந்து சேர்ந்த பொழுது மாண்டேகு-செம்ஸ்போர்டு ஒப்பந்தம் ஏற்பட்ட நிலையில், ஓரளவுக்கு உள்ளூர் நிதி-நிர்வாக அதிகாரம் பிரிட்டிஷாரிடம் இருந்து, உள்ளூர் இந்தியர்களிடம் அதிகாரம் மாற்றப்பட்டதால், பிரிட்டிஷ் மாகாணம் கொடுக்க வேண்டிய 15000 அமெரிக்க டாலர்களை இணைத்தொகையாகத் தருவதற்கு மறுத்துவிட்டனர். எனவே, ஆற்காடு-அமெரிக்க மிஷன் உருவாக்கிய 15,000 அமெரிக்க டாலர்களைக் கொண்டு மட்டுமே விவசாயப் பணியை மேற்கொள்ளவேண்டிய நெருக்கடி தெவலாய்சுக்கு ஏற்பட்டது.

உண்மையில், மிகப்பெரிய பண்ணை, நிலம் உழுவதற்கு இரும்பிலான உழவு இயந்திரம், அதனை இயக்குவதற்கான இயந்திரம் என்ற பின்புலத்தோடு வந்த இளம் தம்பதியருக்கு, கரடு முரடான சாலைகள், இயந்திரம் பார்க்காத தேசம், கட்டை கூர் கலப்பை, அது கொண்டு உழுவதற்கு இரண்டு ஏர் மாடுகள், நீர்பாசனத்துக்கு கவலை ஓட்டம், ஏற்றம் இறைத்தல் என்பது போன்ற செயல்பாடுகள் மிகப்பெரிய அறைகூவலாக இருந்ததோடு, புதிய விவசாய பண்ணை அமைத்தல் என்பது ஒரு பெரிய கொடுங்கனவாகவே இருந்திருக்கும் என்பதில் நெல்முனையளவும் ஐயமில்லை.ஆனாலும் தெவலாய்சம், அவரது மனைவியான ஹென்றிட்சும் கவலைப்படவே இல்லை.

தேவலாய்சும் அவரது மனைவி ஹென்றிட்சும் காட்பாடிக்கு வந்த பிறகு சில காலம் அருள்திரு இராட்சேபர் இல்லத்தில் தங்கி இருந்தனர். அவ்வமயம் மதனபள்ளியில், நடைபெற்ற மிஷினரிகளுக்கான கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 42 மிஷினரிகள் பங்கேற்றனர். அவர்களில் புதியதாக வந்திருந்த 11 மிஷினரிகளை, மற்றவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

1. மௌடே (Maude)-
2. ரூத் ஸ்கடர் (Ruth Scudder)
3. மடில்டா பெர்க் (Matilda Berg)

   ஆகிய மூவரும் கல்விப்பணி மிஷினரிகள் (Educational Missionary)
4. காலன் ஸ்கடர் (Galen Scudder) மருத்துவ மிஷினரி (Medical Missionary)
5. ஜான் (John)
6. ஹெலன் கெபார்ட் (Helen Gebhard)

   ஆகிய இருவரும் தூதுப்பணி மிஷினரி (Evangelism Missionary)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.09*

7. கிரிஷ் தே ஜோங் (Chris De Jong)
8. கேரி வான்டர் போர்க் (Gary Vander Borg)
9. இர்வின் லுப்பெர்ஸ் (Erwin Lubbers)

   ஆகிய மூவரும் உயர்நிலை பள்ளிக்கான குறைந்த கால மிஷினரிகள் (Short Term Missionaries)

10. தெவலாய்சு (De Volois)
11. ஹென்றிட் தெவலாய்சு (Henriette De Volois)

   ஆகிய இருவரும் விவசாய மிஷினரிகள் (Agricultural Missionaries)

அமெரிக்கன் ஆற்காடு மிஷனில், 1920-1930 ஆகிய பத்தாண்டுகளுக்கு 42 மிஷினரிகளின் அர்ப்பணிப்பென்பது மகத்தானது என்பதில் எவருக்கும் மாற்று கருத்து இருக்க முடியாது.

1922ல், இந்தியா முழுவதும் தெவலாய்சு பாப்திஷ்து மிஷனரியோடு இணைந்து அன்றைய இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டு, பல்வேறு இடங்களில் இந்திய விவசாய முறையை கற்றுக்கொள்ள முனைந்தார். பிறகு, கிறித்துவ மருத்துவ கல்லூரியின் கிடங்கு மேலாளராக (Storage Manager) தனது பணியை மேற்கொண்டார்[ix]. பல்வேறு இடங்களில் அறுவடைக் காலத்தின் பொழுது அரிசி வாங்கி அதனை சேமித்து வைத்து, அமெரிக்கன் ஆற்காடு மிஷன் மூலமாக மிஷன் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உணவு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

**விவசாய பண்ணைக்கான விடியல்**

தெவலாய்ஸ், அவர்களுக்கு தொடர்ச்சியான வேலைகள் இருப்பினும், விவசாய பண்ணை அமைக்க நிலம் தேடுகின்ற பணியிலும் ஈடுபடவேண்டும் என்ற நெருக்கடி தெவலாய்சு அவர்களுக்கு இருந்தது. ஒரு கட்டத்தில் விவசாய பண்ணை அமைப்பதற்கான நிலத்தை நாயுடு இனத்தை சேர்ந்த நிலக்கிழார் ஒருவர் தருவதாக செய்தி அதன் அடிப்படையில் அவரை சந்தித்தித்து நிலம் வாங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். இதன் முடிவாக காட்பாடியில் இருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில், 130 ஏக்கர் நிலத்தை அதன் உரிமையாளரான நாராயணசாமி நாயுடு என்பவர், ஆற்காடு அமெரிக்கன் மிஷனுக்கு, 25,000 அமெரிக்க டாலருக்கு தனது நிலத்தை விற்க சம்மதித்தார். ஆனால், அவ்வமயம் விவசாய பணியை மேற்கொள்வதற்கான மொத்த தொகையே 15000 டாலர் மட்டுமே கையிருப்பாக இருந்த நிலையில் நாராயணசாமி நாயுடு விற்க இருந்த நிலத்தை வாங்க முடியுமா என்ற அச்சம் காட்பாடி பகுதியில் இருந்த மிஷினரிகள் மத்தியில் ஏற்பட்டது. ஆனால் அமெரிக்கன் ஆற்காடு மிஷனானது, கடவுள் மீது வைத்திருந்த விசுவாசத்தை

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.09*

விட்டுவிடவில்லை. சனவரி, -1923 அன்று காலை தெவலாய்சு நெகேமியா 3: 18-20 ன் வழியாக எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்ற தியானத்தை மேற்கொண்டார். அதன் பிறகு வெகு சில நாட்களிலேயே, இணைத்தொகை(Matching Grant) 15,000 அமெரிக்க டாலர்களை தருவதாக ஒத்துக்கொண்ட அரசு நிர்வாகம், நாராயணசாமி நாயுடு விற்க ஒப்புக்கொண்ட 130 ஏக்கர் நிலத்தை ஒட்டி இருந்த, 200 ஏக்கர் நிலத்தை விவசாய பண்ணைக்கு தானமாக வழங்கியது. அதன் அடிப்படையில் விவசாய பண்ணைக்கு 330 ஏக்கர் நிலம் அமெரிக்கன் ஆற்காடு மிஷன் வழியாக கையளிக்கப்பட்டது.

அரசு தானமாக வழங்கிய மண்ணின் வளமை மிக குறைவாக இருந்தது. நிலம் பண்படுத்த முடியாத அளவுக்கு மிக கடுமையாக இருந்தது. இந்த நிலத்தில், வெறும் பனை மரங்கள் மட்டும் அதிகமாக வளர்ந்து இருந்தது. எனவே விவசாய பண்ணைக்கென திட்டமும், நிதி வரைவு திட்டமும் மறுஏழுத்தாகின. சுயமாக செங்கல் சூலை அமைத்து, அதன் மூலமாக தெவலாய்சு அவர்களுக்கென தனியானதொரு வீடு, ஆசிரியர்களுக்கான வீடுகள், பள்ளிக்கான கட்டிடம், பலர் தூங்குவதற்கான கட்டிடம், கூரை வேய்ந்த சில கட்டிடங்கள், கட்டப்பட்டது. விவசாயம் மற்றும் கால் நடைகளுக்கு தேவை என்பதற்காக கிணறுகள் தோண்டப்பட்டது. விவசாய நிலம் முழுமையாக சீர்படுத்தப்பட்டது. நிலம் முழுமையும் மரக்கன்றுகள் நடப்பட்டது. கால்நடைகள் மற்றும் பண்ணை பறவைகள் கொண்டுவரப்பட்டது. குறிப்பாக ரோட் இஸ்லேன்ட் சிவப்பு கோழி, ஒயிட் லெக்கன் கோழி ஆகியவை அமெரிக்காவில் இருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்டு[x] கோழிப்பண்ணை விரிவாக்கம் செய்யப்பட்டது.இதுமட்டுமின்றி, 1939-அம ஆண்டில் மட்டும் 97,843 கோழிமுட்டைகள் இப்பண்ணையின் வழியாக விற்பனை செய்யப்பட்டதாக அறிய முடிகிறது[xi]. லாந்து ர்ஹோடே இஸ்லாந்து சிவப்பு

தெவலாய்சு அவர்களுடைய குடும்பத்துக்கென கட்டப்பட்ட தனியானதொரு வீடு, அவர்களுக்கான வீடாக மட்டும் இல்லை. அது அங்கு வசித்த மக்களுக்கான ஆலய வழிபாட்டு தளமாகவும், அஞ்சல் நிலைய அலுவலகமாகவும், மக்கள் கூடி விவாதிக்கின்ற சமுதாய கூடமாகவும், சில நேரங்களில் பணியாளர் கூட்ட அறையாகவும், ஒடுக்குதல் கூட்ட நிகழ்வு அறையாகவும், மாநாட்டு கூடமாகவும், பயன்படுத்தப்பட்டது. இத்தகைய சூழலில், தெவலாய்சு - ஹென்ரிட்டிஸ் இணையரின் மூத்த மகனான ஜாக் முதல், அவர்களுடைய கடைசி மகளான பிரான்சினே கல்லூரிக்கு செல்லும் வரையில் அவர்களை பராமரித்த ஆயா ரூத் இங்கே கவனப்படுத்தவேண்டிய விளிம்புநிலை விதவைத்தாய். இவ்வளவு நெருக்கடிகள் நிறைந்த அந்த வீட்டினுள், குழந்தைகளை பராமரித்த ரூத், நன்றிக்குரியவர் மட்டுமல்ல. வாழ்த்துகளுக்குரியவரும்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.09*

கூட.

**விவசாயகல்விக்கான பாடத்திட்டம்**

விவசாய பண்ணை அமைந்த இடத்தை சுற்றி உள்ள கிராமனகளில் இருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, இங்குள்ளிருந்த பள்ளியில் படிக்கவைக்கப்பட்டு இருந்தனர். அந்த மாணவர்கள் காலையில் இரண்டுமணிநேரமும், மாலையில் ஒரு மணிநேரமும் பண்ணை நிலங்களில் விவாசாயம் செய்ய அனுபவக்கல்வியை பேர ஆரம்பித்தனர். இத்தகைய முறையையில், குழந்தை தொழிலாளர் (CHILD LABOUR) உருவாகாமல், குழந்தை வேலையாட்களாக(CHILD WORKER) எனும் நிலையாக மாறியதில் தெவலாய்ஸ் அவர்களின் பங்கு அளப்பரியது. அதேநேரத்தில், மாணவர்களின் பொதுக்கல்வியில் எவ்வித தேக்கமும் உருவாகாமல் கவனிக்கப்பட்டனர். குறிப்பாக விவசாயப்பன்னையின் விலைமதிக்கமுடியாத தானியங்கள் என்னவென்றால், அங்கு பயின்ற மாணவர்கள் மட்டுமே. ஏனெனில், அவர்கள்தான இந்த நாட்டுக்கும் மட்டுமல்ல, திருச்சபைக்குமான எதிர்கால தலைவர்கள்[xii] என்பதில் ஆழ்ந்த பிடிப்போடு தெவலாய்ஸ் இருந்தார். எனவேதான், ஒவ்வொரு சனிக்கிழமை பண்ணை விடுதியில் தங்கி பயின்ற மாணவர்களை அழைத்துக்கொண்டு அருகில் இருந்த கிராமங்களுக்கு சென்று, வேலைக்கூடாரம் (work camp) அமைத்து கிராமங்களில் தங்கி, நற்செய்தியை கிராம மக்களுக்கு சொல்லுகின்ற பணியை மேற்கொண்டதோடு, அடுத்த நாள் ஞாயிற்று கிழமை அந்த கிராமத்திலேயே ஞாயிறு வழிபாட்டையும் நடத்துவதில் தெவலாய்ஸ் அவர்கள் மிக கவனமாக இருந்தார்.

1929-ல், மே மாதத்தில் "கோடைக்கால பண்ணை மற்றும் விவசாயக் கல்வி" எனும் குறைந்த பட்ச கால பாடத்திட்ட முறையை தெவலாய்ஸ் அவர்கள் அறிமுகப்படுத்தினார். இந்த வகுப்புகளில், 25 மாணவர்கள் சேர்க்கப்பட்டு அவர்கள் பயன் பெற்றனர். இந்த கோடைக்கால சிறப்பு வகுப்புகளில் மாணவர்கள், கோழிப்பண்ணை, கால்நடை பராமரிப்பு, விதை சேகரிப்பு, விவசாயம் போன்ற செயல்பாடுகளோடு, பொழுதுபோக்கு நிகழ்வுகள், நாடகம் மற்றும் வேதாகம அறிவில் விரிவாக்கம் போன்ற காரணிகளில் தெவலாய்ஸ் மிக அதிக கவனம் செலுத்தினார்[xiii].இந்த கோடைக்கால சிறப்பு வகுப்பில் பயிற்சி பெற்று தங்கள் கிராமங்களுக்கு செல்லுகின்ற மாணவர்களோடு தொடர்ந்து அவர்களுடன் தொடர்பில் இருந்து, அந்த மாணவர்களை மேலும் ஆக்கப்பூர்வமான வழிகளில் செல்ல, P.M. கோபாலகிருஷ்ணன் மற்றும் J.S.பீட்டர் என்பவர்கள் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு தெவலாவ்ய்ஸ் அவர்களால் வழிநடத்தப்பட்டனர்[xiv].1930-ம் ஆண்டு நடத்தப்பட்ட "கோடைக்கால பண்ணை மற்றும் விவசாயக் கல்வி" எனும் குறைந்த பட்ச கால பாடத்திட்ட

வகுப்பில், இந்த மாணவர்களோடு, கிராம ஆசிரியர்கள் மட்டும் கிராம சபை ஊழியர்கள் ஆகியோரை இணைத்து வகுப்புகள் நடத்தப்பட்டது. இதன் மூலம் நன்கு கல்வியின்றவர்களும், நிலம் உழுதல், மரக்கன்றுகள் வைப்பதற்கு குழிகளை தோண்டுதல், மாட்டு சாணம் அள்ளுதல், கோழிப்பண்ணையை சீராக்குதல், கால் நடைகளை குளிப்பாட்டுதல் என அனைத்து வேலைகளையும் இளம் பிள்ளைகளோடு இணைத்து செய்த திட்டம் மூலம் மக்கள் மத்தியில் இருந்த white collar job எனும் மாயை உடைக்கப்பட்டது[xv]. இதன் மூலம் கிடைத்த அனுபவங்களில் இருந்து அபிஷேகம் செய்யப்பட போதகர்களும் இணைக்கப்பட்டு இத்திட்டம் முழுமையான வெற்றி அடைந்தது, இதன் மூலம் கிராம பொருளாதாரம் நிலைத்து நிற்பதற்கான முன்முயற்சிகள் கிராம சபைகளின் வழியாக முன்னெடுக்கப்பட்டது[xvi].

1957ல், அமெரிக்கன் ஆர்காடு மிஷன் மற்றும் அதன் மிஷனிரிகளின் பெயரில் இருந்த அனைத்து நிலங்களும் Church of South India Trust association (CSITA) பெயரில் பெயர் மாற்றம் மற்றும் உரிமை மாற்றம் நடைபெற்றது[xvii]. அதன் அடிப்படையில், காட்பாடி விவசாய பண்ணையின் மொத்த நிலம் 303 ஏக்கர் நிலம்[xviii] என மதிப்பிடப்பட்டுள்ளது கவனத்துக்குரியது.

**நிறைவாக**

தற்பொழுது தெவலாய்ஸ் அவர்களது மனைவியான ஹென்ரிட்டே அவர்களின் நினைவாக கசம் இடத்தில் **ஹென்ரிட்டே தெவலாய்ஸ் நினவு ஆலயம்** கட்டப்பட்டுள்ளது. தெ.இ தி வேலூர் பேராயத்தில் அமைந்துள்ள ஆறு கற்கோவில்களில் இந்த ஆலயமும் ஒன்று என்பதை நாம் நமது தலைமுறைக்கு சொல்லவேண்டும். அதுமட்டுமின்றி அந்த பகுதியிலேயே, தெவலாய்ஸ் அவர்களது நினைவாக நமது வேலூர் பேராய நிர்வாகத்தின் கீழ், தெவலாய்ஸ் மேல் நிலை பள்ளி செயல்பட்டு வருவதையும் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

195அ ஆம் ஆண்டு, ஆசியா அளவிலான, பத்தாவது பன்னாட்டு விவசாய பொருளாதார மாநாடு மைசூரில் நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு அன்றைய இந்திய பிரதமர் பண்டிட் ஜவர்லால் நேரு சிறப்பு விருந்தினாராக பங்கேற்றார். காட்பாடி விவசாய பண்ணையின் சார்பில் இந்திய பிரதிநிதிகளாக தெவலாய்ஸ் அவர்களும், மற்றொரு அமெரிக்கன் ஆர்க்காடு மிஷினரியான பெர்னியும் பங்கேற்றனர்[xix]. அதன்பிறகு அன்றைய சென்னை மாநில முதல்வராக இருந்த மாண்புமிகு காமராஜர் அவர்களால், **கிராம சேவா சிரோமணி** எனும் தங்கப்பதக்கம் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார் என்பதும், அன்றைய தமிழக தொழில் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு .பக்தவத்சலம் அவர்களால் மடல் வாசிக்கப்பட்டு பாராட்டப்பட்டதும்[xx] வரலாற்று பக்கங்களின் மற்றொரு நீட்சியாகும். அன்றைய தமிழக தொழில் துறை அமைச்சராக

இருந்த மாண்புமிகு.பக்தவத்சலம் அவர்களால் மடல் வாசிக்கப்பட்டு பாராட்டப்பட்டதும் வரலாற்று பக்கங்களின் மற்றுமொரு நீட்சியாகும்.

காட்பாடி விவசாய பண்ணையின் முதல் இந்திய இயக்குனராக திருமிகு M.J.ஜான் நியமிக்கப்பட்ட பிறகு, ஒய்வு பெற்ற தெவலாய்சு அவர்கள் தனது இறுதி மூச்சு வரையில், பசியுற்றோருக்கு உணவளித்து, கடவுளின் நற்செய்தியை போதியுங்கள் என்பதை தனது வாழ்நாளின் குறிக்கோளாக கொண்டு செயல்பட்டார் என்பதே நமக்கான பாடமாக கொண்டு செயல் படவேண்டும்.

**அடிக்குறிப்புகள்**

---

[i] Autobiography of John James De Valois, Agricultural Missionary, Church of South India, Unprinted Typed Vrsion, Pg:v
[ii] Ibid, Pg-1
[iii] Ibid- Pg-1
[iv] Ibid-Pg-3
[v] ibid-pg-4
[vi] ibid-pg-6
[vii] ibid-pg-6
[viii] Ibid-Pg-6
[ix] Moomaw.I.W, Harper and Row: To Hunger No More, Friendship Press
[x] AAR, 1928, Pg37
[xi] Arcot Coordinating Committee Report,1941, Pg-69
[xii]. John L Peters: Cry Dignity!, Rich Printing Company
[xiii] . Moomaw.I.W: Crusade Against Hunger, Friendship Press
[xiv] . John James De Valois: Autobiography of John James De Valois, Agricultural Missionary, Church of South India, Unprinted-Typed Version,
[xv] . Ibid-Pg-17
[xvi] . Ibid-Pg-17
[xvii] . Renewal and Advance: Report of the Church of the South India Commission on Integration and
Joint Action, 111963, Madras, CLS, 11963
[xviii] Properties held by the American Arcot Mission, October10, 1957, Archives of the RCA
[xix] John James De Valois: Autobiography of John James De Valois, Agricultural Missionary, Church of South India, Unprinted-Typed Version, Pg-53
[xx] Ibid-Pg-54

**நூல் ஆதாரங்கள்**

1. John James De Valois: Autobiography of John James De Valois, Agricultural Missionary, Church of South India, Unprinted-Typed Version, xx
2. John L Peters: Cry Dignity!, Rich Printing Company
3. Moomaw.I.W: Crusade Against Hunger, Friendship Press
4. Moomaw.I.W, Harper and Row: To Hunger No More, Friendship Press.
5. Ralph Felton, Hope Rises from the Land, Friendship Press.